தினமலர் **TNPSC Group 4 தேர்வு**

# மாதிரி வினா-விடை

WWW.TAMILMIXEREDUCATION.COM

## பொதுத்தமிழ் (இலக்கியம்)

1. தவறான கூற்றை எடுத்துரைக்க
(A) கொற்கை அரசன் அதிவீரராம பாண்டியன் எழுதியது "வெற்றி வேற்கை"
(B) "வெற்றி வேற்கை" அறக்கருத்துக்கள் நிறைந்தது
(C) "நறுந்தொகை" என அழைக்கப்படுகிறது
(D) அதிவீரராம பாண்டியனுக்கு சீவலப்பாண்டி என்ற பட்டப்பெயரும் உண்டு

2. தவறான கூற்றை எடுத்தெழுதுக (கா.ப.செய்குதம்பிப் பாவலர்)
(A) நீதி வெண்பா நூலின் ஆசிரியர் கா.ப.செய்குதம்பிப் பாவலர்
(B) கன்னியாகுமரி மாவட்டத்தில் இடலாக்குடி சிற்றூரில் பிறந்தவர்
(C) சீறாப்புராணத்திற்கு உரை எழுதியவர்
(D) ஒரே நேரத்தில் 10 செயல்களைச் செய்து தசாவதானி எனப்போற்றப்படுபவர்

3. பெண்ணினைப் பாகம் கொண்டவன் யார்
(A) சிவன் (B) பிரம்மா
(C) திருமால் (D) இந்திரன்

4. 'கூலம் குவிந்த கூலவீதியும்' கூலம் பொருளென்ன
(A) உணவு (B) கூழ்
(C) தானியம் (D) சந்தனம்

5. கடல்நீர் ஆவியாகி மேகமாகும். பின்னர் மேகம் குளிர்ந்து மழையாகப் பொழியும் இந்த அறிவியல் செய்தி இடம் பெறும் நூல் எது
(A) முல்லைப்பாட்டு (B) திருக்குறள்
(C) திருப்பாவை (D) மேற்கண்ட அனைத்தும்

6. நன்றியறிதல் பொறையுடைமை இன்சொல்லோடு இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை கல்வியொடு இடம்பெற்றநூல்
(A) ஆசாரக்கோவை (B) பழமொழி நானூறு
(C) நற்றிணை (D) மூதுரை

7. வாணிகம் செய்வோர்க்கு வாணிகம் பேணிப் பிறவும் தமபோல் செயின்" குறள் விளக்கும் பொருள்
(A) வணிகரின் உழைப்பை
(B) வணிகரின் பயணத்தை
(C) வணிகரின் நேர்மை
(D) வணிகரின் லாபத்தை

8. அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர், பதினெண் சித்தர்களில் ஒருவர்
(A) அப்பர் (B) திருஞான சம்பந்தர்
(C) மாணிக்கவாசகர் (D) திருமூலர்

9. உலகம் உண்ண உண், உடுக்க உடுப்பாய் யார் கூறியது
(A) பாவேந்தர் பாரதிதாசன்
(B) சீத்தலைச்சாத்தனார்
(C) பாண்டியன் அறிவுடைநம்பி
(D) இளங்கோவடிகள்

10. பொருத்துக
a. தேம்பாவணி — 1. கண்ணதாசன்
b. ரட்சணிய யாத்திரிகம் — 2. வீரமாமுனிவர்
c. கிறிஸ்துவின் அருள்வேட்டல் — 3. கிருட்டிணப்பிள்ளை
d. இயேசு காவியம் — 4. திரு.வி.க

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 1 | 4 | 3 | 2 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

11. சேக்கிழார் எந்த நூலை முதல் முதலாகக் கொண்டு பெரிய புராணத்தை இயற்றினார்
(A) திருத்தொண்டத் திருவந்தாதி
(B) திருத்தொண்டத் தொகை
(C) திருவிளையாடற் புராணம்
(D) கந்தபுராணம்

12. பத்துப்பாட்டு நூல்களுள் ஆற்றுப்படை நூல்கள் எத்தனை உள்ளன
(A) 5 (B) 10 (C) 6 (D) 4

13. பெரும்பாணாற்றுப்படையில் பாட்டுடைத்தலைவர்
(A) சிவபெருமான்
(B) தொண்டைமான் இளந்திரையன்
(C) சிவ ஆதிரையன் (D) முருகன்

14. "புனையா ஓவியம் கடுப்பப் புனைவில்" இடம்பெறும் நூல்
(A) மணிமேகலை (B) நெடுநல்வாடை
(C) சிலப்பதிகாரம் (D) குறுந்தொகை

15. "இன்சொல் விளைநிலனா ஈதலே வித்தாக வன்சொல் களைகட்டு" எனக் கூறியவர்
(A) சமண முனிவர் (B) முனைப்பாடியார்
(C) நாதமுனி (D) அவ்வையார்

16. தேவாரத்தை தொகுத்தவர் ———
(A) வாகீசர் (B) நம்பியாண்டார் நம்பி
(C) மாணிக்கவாசகர் (D) தருமசேனர்

17. "வண்புகழ் மூவர் தண்பொழில் விரைப்பு" எனக் கூறும் நூல்
(A) சிலப்பதிகாரம் (B) தொல்காப்பியம்
(C) புறநானூறு (D) அகநானூறு

18. 'ஏறுகோள்' பற்றி இடம்பெறும் நூல்
(A) கலித்தொகை (B) சிலப்பதிகாரம்
(C) புறப்பொருள் வெண்பாமாலை
(D) இவை அனைத்தும்

**விடைகள்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. D | 2. D | 3. A | 4. C | 5. D | 6. A | 7. C |
| 8. D | 9. A | 10. B | 11. B | 12. A | 13. B | 14. B |
| 15. B | 16. B | 17. B | 18. D | | | |

**தினமும்** **தொடரும் - 10**



256 பக்கம் ரூ. 300

**TNPSC Group-IV & VAO**
**தேர்வு வழிகாட்டி புத்தகம் பெற**
1800 425 7700 ( Toll Free ) 75500 09565 ( Whatsapp ) ( காலை 7:00 - இரவு 7:00 மணி )